# நாடாளுமன்றத் தேர்தல் 2024
# அறவோர் முன்னேற்றக் கழகம்(அ.மு.க)

**தேர்தல் அறிக்கை**

அறவோர் முன்னேற்றக் கழகம் வரலாறு

அறவோர் முன்னேற்றக் கழகம்( அ.மு.க) 2023ஆம் ஆண்டு பிப்ரவரி 8 ஆம் தேதி அன்று புதுக்கோட்டை மாவட்டம் விராலிமலை வட்டம் ராஜாளிபட்டியில் வசிக்கும் ஸ்ரீ சீ.ஜெயபிரகாஷ் ஐயர் M.A.B.L., வழக்கறிஞர் அவர்களின் தலைமையில் அதிகாரபூர்வமாக துவங்கப்பட்டது. இதன் பொதுச் செயலாளர் மாங்காடு G.பாலாஜி ஆத்ரேயா ஆவார். தமிழகம் மற்றும் பிற மாநிலங்களிலும் இதன் நிர்வாகிகள் செயல்படுகின்றனர்.

அறவோர் முன்னேற்றக் கழகத்தின் தீர்மானத்தின்படி ஜாதி மத உட்பிரிவு பேதமின்றி அறவோர் வாழ்வு மேன்மை பெற, **அறவோர் முன்னேற்றக் கழகம்** என்ற அரசியல் கட்சி செயல்படும் என்று **அ.மு.க** நிறுவனத் தலைவர் ராஜாளி ஸ்ரீ சீ. ஜெயபிரகாஷ் ஐயர் M.A.B.L., வழக்கறிஞர் அவர்களால் முன்மொழியப்பட்டு மாநில பொதுக்குழு மற்றும் செயற்குழுவின் முன்வைக்கப்பட்டு ஒருமனதாக பிரகடனப்படுத்தப்பட்டு அங்கீகரிக்கப்பட்டு நடைமுறைக்கு வந்துள்ளது. இனி அறவோர் முன்னேற்றக் கழகத்தின் நடவடிக்கைகள் அ.மு.க. சட்டதிட்ட நெறிமுறைப்படி செயல்படுத்தப்படும்.

## 1. தலைவர் முன்னுரை

அமுக யாருக்கு எதிரான கட்சி , யாருக்கு எதிரான இயக்கம் என்றால் இது ஊழலுக்கு எதிரான இயக்கம்.

யாருக்கு ஆதரவு என்றால் முக்கியமாக அந்தணர் தொடங்கி, ஒடுக்கப்பட்ட முற்பட்ட வகுப்பினர் ஆதரவு இயக்கம். நேர்மையான சமூக பொருளாதார நடுநிலையை நிலை நிறுத்த பாடுபடும் ஒரு இயக்கம். அற நெறியை பின்பற்றும் அறவோர் அனைவரும் இதில் இணையலாம்.

# 2. தேர்தல்குழு

## குழு உறுப்பினர் விபரம்

### நாடாளுமன்றத் தேர்தல் குழு - 2024

*தலைவர்*

**ராஜாளி ஸ்ரீ சீ.ஜெயபிரகாஷ் ஐயர்**

**ஆலோசனை**

**மாங்காடு ஸ்ரீ பாலாஜி ஆத்ரேயா ,காஞ்சிபுரம்**

### நாடாளுமன்றத் தேர்தல் அறிக்கை குழு - 2024

- ஸ்ரீ ராஜேந்திரன் ஐயர்,சென்னை
- ஸ்ரீ பாஸ்கர் ஐயர்,திருவள்ளூர்
- ஸ்ரீ ஹரிஹரன் ஐயர்,கோயம்புத்தூர்
- ஸ்ரீ நிவர்த்தி பாலசுப்பிரமணியம் ஐயர்,திருநெல்வேலி
- ஸ்ரீ கார்த்திக் சிவம்,கள்ளக்குறிச்சி
- ஸ்ரீ துரை சீனிவாசன் ஐயர்,பெரம்பலூர்
- ஸ்ரீமதி காயத்ரி வைத்தியநாதன்,தஞ்சாவூர்
- ஸ்ரீ சீனிவாசன் அருணாச்சலம் ஐயர்,கோயம்புத்தூ
- ஸ்ரீ தேவராஜன் ஐயங்கார்,சென்னை
- ஸ்ரீ சுதர்சனம் ஐயங்கார்,சேலம்
- ஸ்ரீ ரமேஷ் ஐயர் ,புதுச்சேரி

## 3. அடிப்படை அரசியல் கொள்கைகள்

அ.மு.க வின் முக்கிய அடிப்படைக் கொள்கை "**தன்னிறைவு பெற்ற குடும்பங்கள்**" என்பதாக இருக்கும் அதை நோக்கிய பயணம் கீழ்க்கண்ட காரணிகளை கொண்டிருக்கும்

- அறவோர் நலன் & அந்தணர் நலன்
- மற்ற முற்பட்ட பிரிவினர் உரிமை காத்தல்
- எல்லோருக்கும் சம வாய்ப்பு
- முழுமையான ஊழல் ஒழிப்பு
- அனைவருக்கும் விரும்பிய கல்வி, 100 சதம் வேலை வாய்ப்பு
- வேலையில்லாத காலத்தில் உதவித் தொகை . இலவசங்களை எதிர்பாராமல் வேலை வாய்ப்புகள் மூலம் தனிநபர் வருமானம் பெருக்குதல்
- அடிப்படை பொருளாதார வளர்ச்சி
- சமூக ஒற்றுமை, எந்த ஒரு சமூகத்தையும் இழிவு படுத்த தடை
- கலாச்சார பண்பாட்டு வளர்ச்சி
- கோவில்கள் பாதுகாப்பு & அர்ச்சகர் நலன் காத்தல்
- இதர மதங்கள் இந்து மத ஒற்றுமை மேம்பாடு
- உழைப்பாளர் உரிமை காத்தல்
- பெண்களுக்கு சமூக பாதுகாப்பு
- ஐடி துறை பணியாளர் வேலை பாதுகாப்பு உறுதி
- இயற்கை விவசாய மேம்பாடு
- அக்குபங்சர், இயற்கை மருத்துவம் உள்ளிட்ட பாரம்பரிய மருத்துவ முறைகளை ஊக்குவித்தல்
- எளியோரை வலியார் ஒடுக்குவதை தடுத்தல்
- இட ஒதுக்கீடு முறையாக உரியவர்களுக்கு கிடைப்பது உறுதி செய்தல்
- நீர் ஆதாரம் பாதுகாப்பு
- அடிப்படை விவசாய விதிமுறைகள் வகுத்தல்
- அரசு அதிகாரிகள், தொழிலாளர் நலன்
- மீனவர் நலன்
- நெசவாளர் நலன்
- அமைப்பு சாரா தொழிலாளர் நலன்
- விவசாயிகள் நலன்
- இடைத் தரகர்கள் முறையான தொழில் பெற திட்டம்
- விலைவாசி ஏற்றம் கட்டுப்பாடு

## 2024 தேர்தல் வாக்குறுதிகள்:

1. ஒவ்வொரு குடும்பமும் அவர்கள் உடைமையாக சொந்த வீடு பெற வழிமுறைகள் உருவாக்கப்படும்.
2. ஒவ்வொரு குடும்பத்திலும் ஒருவருக்காவது வேலைக்கான உத்திரவாதம் வழங்கும் திட்டம்.
3. அரசு பள்ளி, கல்லூரியில் பயிலும் மாணவர்கள் 100% தேர்ச்சியடைய சிறப்பு பயிற்சி மையங்கள்.
4. அரசுக் கல்லூரியில் பயிலும் காலத்தில் கேம்பஸ் இண்டர்வியூ மூலம் 100% தகுதியானவருக்கு வேலைவாய்ப்பு உறுதி செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்.
5. காவல்துறையினருக்கு வாரத்தில் ஒரு நாள் சம்பளத்துடன் கூடிய விடுமுறை உறுதியாக அளிக்கப்படும்.
6. பெண் காவலர்கள் சாலை பாதுகாப்பில் நிற்கவைப்பது தவிர்க்கப்படும்.
7. மது மற்றும் இதர போதை பொருட்கள் தயாரிப்பது மற்றும் விற்பது ஆகிய இரண்டையும் சட்டத்திற்குப் புறம்பான தொழிலாக அறிவித்து, நாட்டில் உள்ள அனைத்து மதுபான ஆலைகள் மற்றும் மதுபானக் கடைகளை சீல் வைத்து மூட நடவடிக்கை எடுப்போம்.
8. அனைத்து தனியார் கல்வி நிறுவனங்களும் (நர்சரி பள்ளிகள் முதல் பல்கலைக் கழகங்கள் வரை) அரசுடைமையாக்கப்படும்அதற்கான சட்ட திருத்தங்களை மேற்கொள்ள நடவடிக்கைகள் எடுக்கப் படும்.
9. அனைத்து தனியார் மருத்துவமனைகளும் அரசு நிர்ணயிக்கும் விலையில் நலிவடைந்தோருக்கு சேவை வழங்க நடவடிக்கை எடுக்கப்படும். நமது ஜனநாயக நாட்டில் ஜனாதிபதி முதல் கடைசி குடிமகன் வரை ஒரே மாதிரியான மருத்துவ வசதியை உறுதி செய்ய பாடுபடுவோம்.
10. பொருளாதார கொள்கையாக அடிப்படை உற்பத்திக் காரணிகள் என்று சொல்லப்படும் நிலம், கல்வி, மருத்துவம், மூலதனம் ஆகிய அனைத்தும் அரசின் முழுமையான கட்டுப்பாட்டில் இருக்க வழிவகை செய்யப்படும் .
11. ஜாதிவாரி கணக்கெடுப்பு நடத்தப்படும்
12. தற்போது அளித்து வரும் கல்வி& வேலைவாய்ப்பில் 69% இடஒதுக்கீடு உரியவர்களுக்கு முறையாக கிடைக்க ஆவன செய்யப்படும்
13. அந்தணர் நலவாரியம் அமைக்க அனைத்து முயற்சிகளும் மேற்கொள்ளப்படும்
14. பொருளாதாரத்தில் நலிந்தோர்க்கு 10%EWS இடஒதுக்கீடு தமிழ்நாட்டில் நடைமுறைப்படுத்தப்படும்
15. இலவச நீட் தேர்வு மற்றும் இதர போட்டி தேர்வுகளுக்கான பயிற்சி மையங்கள் ஒவ்வொரு வட்டத்திலும் அமைக்கப்படும்
16. விளையாட்டு வீரர்களை பள்ளி அளவில் கண்டறிந்து அரசு செலவில் சிறப்பு பயிற்சி வழங்கப்படும்

17. பெண்கள் சுயஉதவிக் குழுக்கள் மேம்படுத்தப்படும்

18. அரசுப்பள்ளிகள் தரம் உயர்த்தப்படும்

19. பெண்கள் பாதுகாப்புக்கான செயல்பாடுகள் அதிகப்படுத்தப்படும்

20. மழைநீர் சேகரிப்பை அதிகரித்து நிலத்தடி நீர் ஆதாரங்களை உருவாக்கி நீர் தட்டுப்பாடு தீர வழிசெய்யப்படும்

21. அனைத்து தொகுதிகளிலும் சாலை மற்றும் பேருந்து வசதிகள் அதிகரிக்கப்படும்

22. அறநிலையத்துறையை ஒழுங்கு படுத்தி கோவில்களில் பக்தர்களுக்கு இலவச தரிசனம் அதிகரிக்கப்படும்

23. டோல்கேட்களின் கட்டணம் படிப் படியாக சீரமைக்கப்பட்டு குறைக்கப்படும்

24. கழிப்பறை வசதிகள் அதிகரிக்கப்படும், பேருந்து நிலையங்கள் சுத்தமாக பராமரிக்க வழிவகைகள் மேற்கொள்ளப்படும்

25. தொழில் முனைவோருக்கான நிதி ஆதாரங்கள் அதிகரிக்கப்படும்

26. சிறு தொழில் பயிற்சி மையங்கள் உலகத்தரத்தில் அமைக்கப்படும்

27. IAS, IPS, போட்டித் தேர்வு பயிற்சி அகாடமிகள் ஏற்படுத்தப்படும்

28. தரம் வாய்ந்த அரசு முதியோர் இல்லங்கள் அமைக்கப்படும்

29. SENIOR CITIZENகளுக்கு 2 லட்சத்திற்கான இலவச மருத்துவ காப்பீடு வழங்கப்படும்

30. மாற்று திறனாளிகள் பிறர் உதவியின்றி வாழ வேண்டிய வழி முறைகள் நடைமுறைப்படுத்தப்படும்

31.கோவில் சொத்து பாதுகாப்புப் பிரிவு ஏற்படுத்தப்படும். 5 ஆண்டுகளுக்குள் அனைத்து கோவில் சொத்துக்களும் கோவில்களுக்கு திரும்பப் பெற நடவடிக்கை எடுக்கப்படும்.

32. 10 TH & +2 மாணவர்களுக்கு அரசு கோச்சிங் சென்டர்கள் ஏற்படுத்தப்படும்

33. குழந்தைகள் பாதுகாப்பு பலப்படுத்தப்படும்

34. பெண்களை பலவந்தமாக திருமணம் செய்வது சட்ட பூர்வமாக தடுக்கப்படும்.

35.ஊட்டியில் இருந்து பிற மாநிலங்களுக்கு செல்லும் ஆற்று நீர், தண்ணீர் பஞ்சத்தால் பாதிக்கப்பட்டுள்ள கோவை மாவட்டத்திற்கு பயன்பெறும் வகையில், தமிழகத்திற்கு திருப்பி விடப்படும்

36. மகளிர் மாட்சிமை குறைக்கும் எந்த ஒரு நடவடிக்கையும் சட்ட விரோதமாக கருதப்பட்டு உரிய நடவடிக்கை எடுக்க வழிவகை செய்யப்படும்.

37. தமிழக சுற்றுலா தலங்கள் உலகத்தரம் வாய்ந்த அளவில் தரம் உயர்த்தப்படும். வேலை வாய்ப்பு அதிகரிக்க நடவடிக்கைகள் எடுக்கப்படும்

38. ஆன்மீக அன்பர்களின் வசதிக்காக குறைந்த கட்டண ஆன்மீக சுற்றுலா பிரிவு திருச்சியை மையமாக வைத்து ஏற்படுத்தப்படும்

39. தொழிற்சாலைகள் புதிய இடங்களில் நிறுவி அதிக வேலைவாய்ப்புகள் உருவாக்கப்படும்

40. சென்னையில் குடிநீர் பிரச்சினை நிரந்தரமாக தீர்வு காணப்படும், எல்லா பகுதிகளுக்கும் குழாய் மூலம் குடிநீர் கிடைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

41. இரண்டாம் நிலை நகரங்களில் வேலை வாய்ப்பு பெருக IT PARK ஏற்படுத்தப்படும்

42. விவசாயிகளின் நலம் காக்க தேவையான அனைத்து முயற்சிகள் மேற்கொள்ளப்படும்

43. விவசாய சந்தைகள் மேம்படுத்தப்படும்.

44. பாதுகாப்பற்ற சூழலில் வாழும் அந்தண சமுதாய மக்களுக்கு பாதுகாப்பு உறுதி செய்யப்படும்

45. கோயில் குருக்கள் சம்பளம் அரசு ஊழியருக்கான விகிதத்தில் நிர்ணயிக்கப்படும்

46. அறநிலையத்துறையில் அந்தண சமுதாய மக்களுக்கும் வேலை வாய்ப்பு அளிக்க வழி வகை செய்யப்படும்

47. அரசுப்பள்ளிகளில் ஆங்கில மற்றும் பிற மொழி வழிக்கல்விக்கான தரம் உயர்த்தப்படும்

48. வேலை வாய்ப்பு மையங்கள் மேம்படுத்தப்பட்டு 5 ஆண்டுகளுக்குள் அனைத்து தகுதியானவர்களுக்கும் வேலை வாய்ப்பு உறுதி செய்யப்படும்

49. வேலை தேடுவோரை விட அதிக எண்ணிக்கையில் வேலை வாய்ப்பு உருவாக்கப்படும்

50. 2 லட்சத்திற்கும் குறைவான ஆண்டு வருமானம் உள்ள குடும்பத்திற்கும் நவீன மருத்துவ வசதி கிடைக்க வழி செய்யப்படும்

51. அமுக சார்பில் இலவச சட்ட உதவி மையங்கள் அமைக்கப்படும்

52. பெண்களுக்கான வேலைவாய்ப்புகள் அதிகரிக்கப்படும்

53. புதிய வேளாண் பூங்கா குளித்தலையில் அமைக்கப்படும்

54. வரலாற்று நாயகர்களான சேர சோழ பாண்டியர்கள் பல்லவர், நாயக்கர் பெயர்களில் மண்டலங்கள் உருவாக்கப்படும்

55. ஜி.எஸ்.டி. ரோடு மாமன்னர் ராஜராஜ சோழன் பெருஞ்சாலை பெயரில் மாற்றப்படும்

56. மதுரை – கன்னியாகுமரி சாலை பாண்டிய மாமன்னர் மாறவர்மன் சுந்தர பாண்டியன் பெயரில் அமையும்

57. கிழக்கு கடற்கரை சாலை மாமன்னர் ராஜேந்திர சோழன் பெயரில் அமைக்கப்படும்

58. புதுக்கோட்டையில் தமிழ் வேந்தர் பூங்கா அமைக்கப்பட்டு தமிழகம் ஆண்ட மன்னர்களின் புகழ், வரலாறு அனைவரும் அறிய வகை செய்யப்படும்

59. முல்லை பெரியாறு அணையில் கேரள மாநிலத்துடன் பேச்சு வார்த்தை நடத்தி சுமுக தீர்வு காணப்படும்

60. பள்ளி மாணவர்களுக்கு சிகரெட், சாராயம், போதைப்பொருள் விற்பவர்களுக்கு கடுமையான தண்டனை விதிக்கப்படும்.

61. அனைத்து மாவட்டங்களிலும் சிறப்பு கல்வி மையங்கள் அமைக்கப்பட்டு அதன்மூலம் மாணவர்களுக்கு இலவச தொழிற்கல்வி மற்றும் அரசாங்க வேலை வாய்ப்புகள் பெற ஏற்பாடுகள் செய்யப்படும்

62. பொறியியல் பட்டதாரிகளுக்கு தொழில் நுட்ப ஆலோசனை , தொழில் தொடங்க சிறப்பு மையங்கள் உருவாக்கப்படும்.

63. தேர்வுகளில் தோல்வி ஏற்பட்டால் தற்கொலை என்ற நிலை மாற அனைத்து பள்ளிகளிலும் சிறப்பு மன நல காப்பு ஆலோசனை பிரிவுகள் உருவாக்கப்படும்.

64. வட்டார மருத்துவமனைகள் தரம் மேம்படுத்தப்படும்.

65. அரசு மருத்துவர்கள் பிரைவேட் பிராக்டிஸ் செய்வது தடை செய்யப்படும்.

66. புதிய சுற்றுலா தலங்கள் அமைக்கப்பட்டு அதன் மூலம் சிறு குறு வியாபாரிகள் பயன்பெறும் வகையில் ஏற்பாடுகள் செய்யப்படும்

67. அனைத்து மக்களுக்கும் சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் குழாய் மூலம் வழங்க ஏற்பாடுகள் செய்யப்படும்.

68. ஒவ்வொரு குடும்பத்துக்கும் பிரதான் மந்திரி ஹெல்த் கேர் கார்டு குடும்ப வருமானம் எவ்வளவு இருந்தாலும் குறைந்த பட்சம் 5 லட்சத்திற்கான இன்சூரன்ஸ் கொடுக்கப் பட ஆவன செய்யப்படும்

69. நெடுஞ்சாலைகளில் போக்குவரத்து ஆய்வு நடத்தி அடிக்கடி விபத்து ஏற்படுவதை தவிர்க்க சாலை விரிவு, மேம்பாலம் கட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

70. மேட்டூர் அணையின் உபரிநீரை வீணாக்காமல் புதிய ஏரிகள் உருவாக்கி குடிநீர் மற்றும் விவசாய தேவைகளுக்கு பயன்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும்.

71. பட்டு மற்றும் கைத்தறி தயாரிப்புகளுக்கு உரிய விலைகிடைக்க நடவடிக்கை எடுக்கப்படும்

72. கச்சத்தீவு மீட்க நடவடிக்கை எடுக்கப்படும்

73. மீனவர் நலம் காக்க நடவடிக்கை எடுக்கப்படும்

74. இலங்கை கடற்பகுதியில்இந்திய மீனவர் மீன் பிடிக்க இலங்கை அரசுடன் இந்திய அரசு மூலம் பேச்சு வார்த்தை நடத்தி வேலை விசா தீர்வு காணப்படும்.

75. ஆதரவற்றோர், கைம்பெண்டிருக்கு வேலைவாய்ப்பு அலுவலகத்தில் முறையாக பதிவு செய்து, கருணை அடிப்படையில் வேலை வாய்ப்பு வழங்குதல் ஒரு வருடத்திற்குள் நிறைவேற்றப்படும்.

76. அரசு மருத்துவமனைகள், பிற அலுவலகங்களில் மாற்றுத் திறனாளர் புரிந்து கொள்ளக்கூடிய வகையில் சைகை மொழி பெயர்ப்பாளரை நியமிப்போம்.

77. விவசாயிகள் தங்கள் விளை பொருள்களை சேமித்து வைப்பதற்கு முறையாக வட்டார பாதுகாப்பு கிடங்குகள் கட்டபடும்

78. காய்கறி பழங்கள் பாதுகாப்பு கூடங்கள் ஒவ்வொரு வட்டத்திலும் கட்டப்படும்.

79. அந்தந்த மாவட்டங்களில் சிறிய அல்லது பெரிய பேருந்து நிலையத்திற்கு அந்த மாவட்டத்தின் முக்கிய இந்திய சுதந்திர போராட்ட தியாகியின் பெயர் வைக்கப்படும்.

80. அரசியல் தலைவர்கள் பெயரை அரசாங்க நிலையங்களுக்கு பெயரிடுதல் தடை செய்யப்படும்

81.தமிழகத்தில் ஒவ்வோரு கிராமத்திலும் கூட்டுறவு சங்கம் மூலம் கிராம பொருளாதாரம் மேம்படுத்தப்படும்

82. விவசாயிகள் மற்றும் தொழில் முனைவோர்களுக்கு கூட்டுறவு வங்கிகள் மூலம் மத்தியகால மற்றும் நீண்ட கால கடன் குறைந்த வட்டிக்கு வழங்கப்படும்.

83. காலியாக உள்ள அனைத்து அரசு பணியிடங்களும் ஒரு வருடத்திற்குள் நிரப்பப்படும்

84. தொகுப்பூதியம், தினக்கூலி, ஒப்பந்த அடிப்படையில் அரசு அலுவலகங்களில் பணியாற்றும் பணியாளர்கள் நிரந்தர பணியாளர்கள் ஆக்கப்படுவர்.

85. அரசு அலுவலகங்களில் திறமையின்மை குறித்த புகார் செய்தால் உரிய நடவடிக்கை ஒரு மாத காலத்திற்குள் எடுக்கப்படும்.

86. சிறந்த உடல்நலம் பேணும் அரசு ஊழியர்களுக்கு சிறப்பு ஊதியம் அளிக்கப்படும்

87. மக்கள் ஆதரவு பெறும் அரசு அதிகாரிகள் முறையாக கௌரவிக்கப்படுவார்கள்

88. பழைய ஓய்வூதியத் திட்டம் மறுபடியும் நடைமுறைப் படுத்தப்படும்.

89. 20 வருடங்கள் ஓய்வூதிய சேமிப்பு அளிக்கும் எவரும் ஓய்வூதியம் பெற திட்டம் வகுக்கப்படும்

90. ஜாதி,மத, தேச விரோத பேச்சு மற்றும் எழுத்து தண்டனைக்கு உரிய குற்றமாக கருதப்படும்

91. விலைவாசி ஏற்றம் வருடத்திற்கு 5 சதவீதம் மிகாமல் கட்டுக்குள் இருக்க நடவடிக்கை எடுக்கப்படும்

92. தமிழ் வளர்ச்சிக்காக **தமிழ் இருக்கை** இந்தியாவின் அனைத்து பல்கலைக்கழகங்களிலும் நிறுவ நடவடிக்கை எடுக்கப்படும்.

93. பத்திரிகை, தொலைக் காட்சி போன்ற மக்கள் செய்தி நிறுவனங்கள் "தமிழ் சரிபார்ப்பு அதிகாரி" நியமிக்க நடவடிக்கை எடுக்கப்படும். தமிழ் கற்ற புலவர்கள் சரி பார்த்து சான்றளிக்காமல் தவறாக சொல் பொருள் இலக்கண பிழையுடன் செய்திகள் வெளியிடுவது குற்றமாக கருதப்படும்

94. மற்ற மொழி நூல்களை தமிழில் மொழி மாற்றம் செய்ய அரசு உதவி வழங்கும் நடவடிக்கை எடுக்கப்படும்

95. மலை சார்ந்த மற்றும் இயற்கை வளம் சார்ந்த பகுதிகள் அதன் தன்மை மாறாமல் பாதுகாக்க உரிய நடவடிக்கை எடுக்கப்படும்

96. பிற பிரதேச கழிவுகள் தமிழக எல்லைக்குள் கொட்டாமல் தடுக்க நடவடிக்கை எடுக்கப்படும்

97. கனிம வளங்கள் பாதுகாக்க உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும்

98. உயர் அதிகாரிகள், நடிகர் நடிகைகள் அதிக பட்ச ஊதியம் கட்டுப்பாடு எல்லைக்குள் கொண்டு வர சட்டம் இயற்றப்படும்

99. அரசியல் பதவிகள் வகிப்பவர் வருமானம் ஈட்டும் வேறு எந்த ஒரு தொழிலிலும் ஈடுபடுவது கட்டுப்படுத்தப்படும். இதற்கு உரிய சட்டங்கள் இயற்றப்படும்

100. ஒவ்வொரு வருடமும் மக்கள் கருத்து கணிப்பு நடத்தி நிர்வாக குறைகள் களையப்படும்.

101.மதுரை விமான நிலையத்திற்கு பசும்பொன் முத்துராமலிங்க தேவர் ஐயா பெயர் சூட்டுப்படும்.

102. திருச்சி விமான நிலையத்திற்கு மாமன்னர் பெரும்பிடுகு முத்தரையர் பெயர் சூட்டுப்படும்.

103. புதுக்கோட்டை பாராளுமன்றத் தொகுதி மீட்கப்படும்.

104. மறைந்த முன்னாள் முதல்வர் புரட்சிதலைவி ஜெ.ஜெயலலிதா அவர்களுக்கு பாரத ரத்னா விருது வழங்கப்படும்.

105. சுதந்திரப் போராட்ட வீரர் மாவீரர் வாஞ்சிநாதன் ஐயருக்கு, அவர் உயிர் தியாகம் செய்த வாஞ்சி மணியாச்சி ரயில் நிலையத்தில் முழுஉருவச்சிலை மற்றும் சென்னையில் முழுஉருவச்சிலை வைக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

106. பெண்ணுரிமை காவலர் பாரதியார் பிறந்த நாளை அரசு விடுமறை நாளாக அறிவிக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

107. மறைந்த முன்னாள் முதல்வர் புரட்சித்தலைவர் எம்ஜிஆர் அவர்களின் கனவுத்திட்டமான திருச்சி மாநகரத்ததை தமிழகத்தின் இரண்டாம் தலைநகரமாக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

108. இந்தியாவில் இலங்கை அகதி முகாமில் உள்ள ஈழத்தமிழர்களுக்கு இந்திய குடிமகனுக்கு அளிக்கப்படும் தகுதிகளில் வாக்குரிமைத் தவிர அனைத்து சலுகைகளும் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்.